19 | ஆக.15 - செப்.14

35 காசு

# சுட

மாத இதழ்




FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010




FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

# 1/2 மனிதர்

கென்டக்கி பல்கலைக்கழகத்தில் (அமெரிக்கா) படிக்கும் சூப்பர் சாம் (18) என்ற இந்த இளைஞருக்கு நோய் காரணமாக உடலில் இடுப்புக்கு கீழே உள்ள பகுதி முழுவதையும் ஆப்ரேஷன் மூலம் நீக்கிவிட்டார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்த துயரம் நிகழ்ந்தது.

ஆனல் மனம் தளராத சாம், செயற்கை கால்களை தூக்கி எறிந்துவிட்டு தன் கைகளையே கால்களாக்கிக் கொண்டு நடந்து செல்லவும் அன்றாடப் பணிகளைச் செய்யவும் பழகிக் கொண்டு விட்டார். 'பில்லியர்ட்ஸ்' விளையாடவும், கார் ஓட்டவும் செய்கிருர். இப்போது 2 அடி 9 அங்குலம் உயரம் உள்ள இவருக்கு திருமண வாழ்க்கை மட்டும் கிடைக்காது!





# நாட்டு நடப்பு



**ஹரியாஞ:** தான் பெரும்பான்மை பலம் பெற்று முதலமைச்சராக அமர, பஜன்லால், புதுடில்லி ஹரியாஞ பவனில் அனுவ்தான் என்ற யாகம் நடத்தியிருக்கிருர். இரகசியமாக நடத்தப்பட்ட இச் சடங்கு பஜன்லாலின் ஆத்மீக குருவாகக் கருதப்படும் சுவாமி ராதா கௌமுதாசாரியா என்ற இளம் சாதுவால் நடத்தப்பட்டிருக்கிறது. ஜூன் 12 ஆரம்பிக்கப்பட்ட இச் சடங்கு பஜன்லால் பெரும்பான்மை பலம் பெறும் வரை நடை பெற்று இருக்கிறது.

**மகாராஷ்டிரம்:** சமீபத்திய பத்திரிகைப் பேட்டியொன்றில் முன்னுள் முதல்மைச்சர் அந்துலே கூறிஞர்: "கட்சி தலைவர் தேர்தல் இன்று நடந்தால் 80 சட்டசபை உறுப்பினர்கள் எனக்கே ஓட்டுப்போடுவார்கள். என்னைச்சுவரில் அடித்தால் நான் இன்னும் வேகமாகத் திரும்பியே வருவேன்"

**மே. வங்கம்:** ஜோதிபாசுவின் இடது சாரி அரசு தொழிலாளர்களுக்கு நாளுக்குநாள் சம்பள உயர்வும், வசதியும் ஒரு பக்கம் அளித்து வந்தாலும், மறுபக்கம் மாநிலத்தில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது. 1943க்கு பின் இப்போது கடும் பஞ்சம் ஏற்பட்டு, 13 மாவட்டங்களின் 54 மில்லியன் மக்களில் 30 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பயிர் சேதம் ரூ 130 கோடி. 30லட்சம் விவசாயிகளுக்கு வேலையில்லை. 17 சணல் ஆலைகள் வேலையின்றி போனதால் 70,000 சணல் தொழிலாளர்க்கு வேலையில்லை. 82—83 ஆண்டுக்குரிய திட்டச் செலவு ரூ 750 கோடியிலிருந்து ரூ 400 கோடிக்குக் குறைக்கப் பட்டிருக்கிறது.

**உத்திரபிரதேசம்:** உ. பி புதிய அமைச்சரவையில், முதலமைச்சர் சிர்பட் மிஸ்ராவின் கையையும் மீறி, கடைசி நேரத்தில் சிலர் அமைச்சரவையில் நுழைந்துள்ளனர். மத்திய அரசில் செல்வாக்குள்ள சில மிக முக்கியஸ்தர்களுக்கு பெருந் தொகை லஞ்சம் வழங்கியே இவர்கள் இதனைச் சாதித்ததாகத் தெரிகிறது.

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

# நமது திராட்சை மருத்துவம்

☐ திராட்சை பச்சையாக உள்ளபோதும், உலர்ந்திருக்கும் போதும் அதன் மருத்துவ குணம் ஒரே மாதிரி சிறப்புடன் தான் உள்ளது.

☐ திராட்சைப் பழத்தை பன்னீரில் ஊறவைத்து சாறு பிழிந்து பருகினால் இதயநோய்கள் அகலும். இதய செயற்பாடு சிறப்பாக அமையும்.

☐ குடற்புண் உள்ளவர்கள், கல்லீரல், மண்ணீரல் கோளாறு உள்ளவர்கள் இதன் பழச்சாற்றை 3 வேளை, ½ அவுன்ஸ் வீதம் பருகினால், குணம் பெறலாம்.

☐ 20 கிராம் உலர்ந்த திராட்சையை நெய் விட்டுப் பொரித்து சாப்பிட்டு வந்தால் சூடு. காரணமாகத் தோன்றும் இருமல் மட்டுப்படும்.

☐ அசைவ உணவு உண்ணாதவர்கள்; அன்றாட வாழ்வில் திராட்சையைச் சேர்த்துக்கொண்டால், அசைவ உணவினால் கிடைக்கக்கூடிய தேவையான பலன்களை திராட்சையால் பெற முடியும்.

☐ தொடர்ந்து திராட்சை சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களுக்கு உடலில் நோய் தடுப்பு சக்தி வலுப்படும். குளிர்ச்சியும், சீரண சக்தியும் தருவது திராட்சை.

☐ காலை எழுந்தவுடன் திராட்சை ரசம் ஒரு கோப்பை பருகி வந்தால், நாட்பட்ட தலைவலி, ஒற்றைத்தலைவலி இவை தரும் தீராத தொல்லைகள் தீரும்.

☐ மாதவிடாய் கோளாறுடைய பெண்களும், கர்ப்பிணிகளும் நாள்தோறும் காலை வெறும் வயிற்றில் திராட்சை ரசம் பருகு-வது நல்ல பலனளிக்கும்.

☐ குழந்தைகளுக்கேற்ற நல்ல மருத்துவப் பண்டம் திராட்சை. பல்முளைக்கும் பருவத்தில் ஏற்படும் மலக்கட்டு, பேதி, காய்ச்சல் போன்றவற்றிற்கு 2 வேளை ஒரு தேக்கரண்டி சாறு பிழிந்து கொடுத்தால் பலன் தெரியும்.

☐ திராட்சையில் சுமார் 60 வகைகள் உள்ளன. இதில் புளிக்கும் இனத்தைவிடப் புளிப்பு இல்லாத இனமே மிகச்சிறந்த பலன் தருவதாகும்.




செத்த பாம்படித்து சரித்திரம் படைக்கும்
பல்கலைக் கழகமே!
இன்றும் மடியாத அந்நிய மோகத்தின்
வெள்ளை வெட்டையே!
மனிதனைக் காசினால் அளக்கக் கற்பிப்பாய்
கற்பித்ததும் மேலை நாட்டில் ஏலம் போடுவாய்
டாக்டர்களை ஏற்றுமதி செய்து விட்டு
நோய்களை இறக்குமதி செய்கிறாய்
காப்பியடித்தால் கடுமையாய்த் தண்டிக்கிறாய்
உன் பாடத்திட்டம்
இங்கிலாந்தைப் பார்த்து அடித்தது தானே!

—அக்கினிபுத்திரன்

(17—7—82 அன்று கல்லூரி ஆசிரியர்கள் கூட்டு நடவடிக்கை குழு நடத்திய தர்ணா போராட்டத்தின் போது படிக்கப்பட்ட கவிதைகளின் ஒரு பகுதி)

புனிதங்களையெல்லாம்
மாசுபடுத்தும் போராட்டக்காரர்களே!
கலைமகள் ஆலயத்தைக்
களங்கப்படுத்தாதீர்கள்...
பழங்குப்பையான
பாடத் திட்டத்திலிருந்து
கொட்டுந்தூசியால்
வகுப்பில்
மூச்சடைக்கிறது
என்று
முணங்குகிறீர்கள்?
அவை
தூசுகள் அல்ல
மெக்காலே
இந்தியர்களின் நெற்றிக்குப்
பட்டை போடத் தந்த
திரு நீற்றின் மிச்சம்.

—இன்குலாப்

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

## பட்ஜெட்

அத்யாவசியப் பண்டங்கள்
அலறிக் கொண்டு
பதுங்கிக் கொள்ள
அரசு வெடிக்கும்
ஆபத்தான வெடிகுண்டு.

—கிரிஜா மணாளன்

## மனுநீதிச் சோழர்கள்

நாங்கள் மனுநீதிச் சோழர்கள்
வேலை தேடி
மனுப்போட்டு மனுப்போட்டு
நீதி கிடைக்காது மரத்துப்
போனதினால்
நாங்கள் மனுநீதிச் சோழர்கள்

—மணிமொழி

## புன்னகை

அட்மிஷன் வேண்டி
அலையாய் அலைந்து
கையூட்டு கொடுத்து
பிள்ளைகளைப்
பள்ளியில்சேர்க்கையில்
மனைவியின்
புன்னகை போதவில்லை
பொன்னகையே தேவை
யுற்றேன்

—சாயி

## சாலைகள்

உட்கட்சி சண்டைகளைப்
பழுது பார்க்கவே
நேரமில்லாத எங்கள்
ஆட்சியாளர்களுக்கு
இதுகளைப் பழுது பார்க்க
ஏ தண்ணே நேரம்?

—பாரதிப்ரியா

ஜவியர்

# ஜெயராஜ் பதில் தருகிறார்

அன்புடையீர்,

வணக்கம் திறந்த மனதோடு நீங்கள் எனக்கு சென்ற இதழில் எழுதிய கடிதம் என்னைச் சிந்திக்க வைத்தது உங்கள் எழுத்தி லுள்ள ஒளிவு மறைவற்ற தன்மை என்னைக் கவர்ந்தது. அதைப்படித்துவிட்டு நான்சொல்ல விரும்பும் விளக்கம் இதுதான் :—

'செக்ஸ்' என்ற மூன்றெழுத்து விஷயம் மனித வாழ்க்கை யின் சுக துக்கத்தில் பங்கேற்கிறது சுருக்கமாக, வாழ்க்கையின் அடிப்படையே இந்த அச்சாணியைச் சுற்றிச் சுழல்கிறது. மற்றெல் லா சப்ஜக்ட்டுகளையும் சாதாரணமாகக் கண்ணோட்டம் விட்டு விட்டு இந்த அடிப்படையை மட்டும், அதன் மேல் உள்ளுக்குள் தன்னையும் மீறிய ஒரு அக்கரை இருந்தும் கூட 'செ..சீ' என்ற விகாரமான சொற்கள் உதிர்க்கும் கூட்டத்தைச் சேர்ந்த சிலரின் 'வெளி'க்கருத்துக்களையே நீங்கள் எதிரொலித்திருக்கிறீர்கள்.

ஒரு நண்பர் வீட்டில் 'காப்பி' கொடுத்தால் அதைக்குடிக்க ஆசையிருந்தாலும் முதலில் மறுத்து, பிறகு வாங்கிக் குடிப்பதும் திருமண வீட்டில் தனக்கு மேலும் சாப்பாடு வேண்டுமென்பதற் காக பக்கத்து இலைக்குப் போடச்சொல்வதும் நமது பண்பாட்டில் இழையோடும் போலித்தனங்கள். வெளிநாட்டிலோ, வெளி நாட்டுப் படத்திலோ காதலர்கள் முத்தமிட்டுக்கொண்டால் 'அய்யோ இதென்ன பப்ளிக்கில் ஆபாசம்' என்று பிகு பண்ணு விட்டு, பல் துலக்குவது, மலம் கழிப்பது, குளிப்பது போன்ற வற்றைச் சாலையோரத்தில் நடத்துவதை நம் நாட்டில் சகஜமாக ஏற்கிறோம்.

செக்ஸ் என்கிற அடிப்படையான ஒரு விஷயத்தை மூடி மறைப்பதையே பெரிய பண்பு என்று சொல்லும் தன்மை நம் மிடையே உள்ளது. ஆனால் மேலை நாட்டாரின் மூவிகாமிராவை-யும், ஆட்சி முறையையும், அனுபவித்துக் கொண்டு அவர்கள் நாகரிகத்தை கேலி செய்வது நன்றிகெட்டதனம் மட்டுமல்ல நான் தோன்றித்தனமுமாகும் பெருமையாகச் சொல்லும் நம் பழம் பண்பாட்டில், தகப்பன் இறந்தால், மகனே தாயை உடன்கட்டை

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

## சுட்டி இலவசமாக அனுப்புங்கள்

'சுட்டி'யை இன்னும் படிக்காத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா?

அவர்களுக்குச் 'சுட்டி'யை அறிமுகப்படுத்த விரும்புகிறீர்களா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரி இதழ் உங்கள் சார்பாக அனுப்புகிறோம். அஞ்சலட்டையின் மேல் மாதிரி இதழ் எனக் குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரி வேண்டுமானாலும் அனுப்பலாம்.

---

ஏறுதல் என்ற பெயரைச் சொல்லி தீக்குள் தள்ளிவிட ஏற்பாடு செய்தாக வேண்டும்—ராஜா என்றிருந்தால் அவள் 3 பெண்டாட்டிக்கு குறையாமல் வைத்திருந்தால் தான் கௌரவம். சில சமயங்களில் ஒருத்திக்கு 5 புருஷர்கள் கூட இருப்பார்கள். இப்படிப் பல.

இதையெல்லாம் கண்டும் காணாமல் விட்டு விட்டு நான் ஒரு பத்திரிகை ஓவியன்—வாசகர்களின் தேவைக்கேற்ப வாழ்க்கையின் மையமான ஒரு இனிய விஷயத்தை அடிப்படையாகக் கொண்டு வரைகிறேன். நான் பத்திரிகைகளின், வாசகர்களின் தேவைக்கேற்ப படம் போட்டு என்னுடைய அரிதான திறமையைக் குறுக்கிக் கொண்டிருக்கிறேன் என்று சொல்கிறீர்கள். நான் தான் என் திறமையையே பத்திரிகை உலகத்துக்குக் கொடுத்துவிட்டேனே. அதை விட்டு விட்டு நானே சொந்தமாகப் பெரிய பாரதியார் படம், பாரத மாதா படம், காந்தி, புத்தர், இயேசு படம் இன்னும் இயற்கைக் காட்சிகள் படமெல்லாம் பெய்ண்ட் செய்து காட்ட எனக்கு நேரம் கிடையாது. பத்திரிகை ஓவியன், அதற்காக உழைப்பது தான் தர்மம். என் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள், அதாவது நான் வரையும் பத்திரிகைகளை மட்டுமே சாடுகிறீர்கள். வேறு எந்த நாட்டில் எந்தப் பத்திரிகைகளில் கவர்ச்சியான, இளமையுணர்ச்சியுள்ள படங்கள் இல்லாமலிருக்கிறது?

மக்கள் விரும்புவதைப் படம் போட்டு நானும் வெளியிட்டுப் பத்திரிகைக்காரர்களும் பணம் பண்ணிவிடுகிறோம் என்று குறை கூறுகிறீர்கள். பணம் இல்லாவிட்டால் நானோ பத்திரிகைக்காரர்களோ, பிள்ளை குட்டியோடு பட்டினி கிடந்து 'அம்போ' என்று போக வேண்டியதுதான்.


புது அச்சகம் தொடங்குவோரும், புது அச்சு எழுத்துக்கள் வேண்டுவோரும் சிறந்ததை மலிவாகப் பெற மறவாமல் தொடர்பு கொள்க:-

**ரங்கா டைப் பௌண்ட்ரி**

☐ போஸ்டர் அச்செழுத்துக்கள் எங்கள் சிறப்புத் தயாரிப்பு
☐ எல்லாவித அச்சு எழுத்துக்கள், அச்சக உபகரணங்கள்.

அலுவலகம்:- 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-600112

தொழிற்சாலை:- 38, குட்டி செட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-600007

தொலைபேசி: 37999, 30857


நீங்கள் எனக்கு அந்தக் கடிதத்தை எழுது முன் உயிரைக் காப்பாற்றும் மருந்தில் கலப்படம் செய்வது, பஸ்ஸில் கைக்குழந்தை ஏந்திக்கொண்டிருப்பவளைக் கூட விட்டு வைக்காமல் பெண்களை இடிப்பது, ரோட்டை பாத்ரூமாக்குவது, உயிர் போகும் தருவாயிலும் ஆஸ்பத்திரி சொத்தான ஆக்ஸிஜன் சிலிண்டரைப் பணம் கொடுத்தால்தான் கொண்டு வருவேனென்று நலியும் ஏழைகளிடம் சொல்வது, இப்படி இன்னும் எத்தனையோ அக்கிரமமான, ஆபாசங்களை ஒழிக்கும் முயற்சியில் கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டிருக்கலாம் என்று கருதுகிறேன்.

மற்றபடி நீங்கள் குறிப்பிட்ட பல விஷயங்கள் எனக்கு உறுதுணையாகவும், திருப்திகரமாகவும் இருந்தாலும், என்னை நான் பத்திரிகைத் துறைக்கு அர்ப்பணித்துவிட்டதால், நீங்கள் சுட்டிக் காட்டியபடி இறங்க நேரமில்லை. நான் பத்திரிகைத் துறையைத் தாழ்வாக எண்ணாமல் அதுவும் (Journalism) ஒரு சிறந்த கலை என்று மதிக்கிறேன்.

அன்புடன்

நன்றி! **ஜெயராஜ்.**

**சுட்டி பழைய இதழ்கள்** தற்போது 5 முதல் 18 வரை மட்டுமே உள்ளன. அவற்றைப் படிக்க விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M O) அனுப்பினால் எங்கள் செலவில் உங்களுக்கு அனுப்புகிறோம்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

# சிறுபான்மையினர் உரிமையும் எஸ்.ஐ.இ.டி. கல்லூரியும்

சுதந்திர இந்தியாவின் சிறு பான்மையினரின் மொழி, மத பண்பாட்டுக்குப் பாதுகாப்புத் தரும் வண்ணம் அமைத்த அரசியல் நிர்ணயச் சட்டம் இது:—

"தங்களுக்குப் பிடித்த கல்விக் கூடங்களை நிறுவவும் நிர்வகிக்கவும் சிறுபான்மையினருக்கு உரிமை உண்டு" —பிரிவு 30 (I)

தற்காப்புக்கு உதவ வேண்டிய இச்சட்டத்தை, வைத்து சிலர் சிறு பான்மையினர் என்ற பெயரில் வியாபாரக் கல்விக் கூடங்கள் தொடங்கி பயில்வோரையும். பயிற்றுவோரையும் வயிற்றிலடித்துப் பகற் கொள்ளையடிக்க பயன் படுத்திக்கொண்டனர். நில உச்ச வரம்புச் சட்டத்தை ஏமாற்ற எண்ணியவர்கள் எளிதாகத் தப்பிக்க, உச்ச வரம்பு நிலங்களைக் கல்விக் கூடங்களாக்கினர்.

உழைப்போர் கூட்டம் உலக முழுவதும் உரிமைப் போர் தொடுக்கின்ற காலக் கட்டத்தில் ஊருக்குழைக்கும் ஆசிரியன் ஒட்டாண்டியாகி நின்ற போது, ஆசிரியர் தினங்களும், போலிப் பாராட்டும், அவனது ப்சிக்கும் மானக் கேட்டுக்கும் போதவில்லை.

வீதிக்கு வந்தான். நியாயம் கேட்டான். உரிமைகள் கேட்டான், கொதித்தது கொள்ளைக் கூட்டம், அரசு கண் துடைப்புச் சட்டங்கள் செய்தது, சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் நீதி மன்றம் சென்ற போது, சட்டங்கள் பணம் படைத்தவர்களின் பாதுகாப்புக்கே என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டது.

அரசு மானியம், பெற்றோர்கள் நன்கொடை. பல்கலைக்கழக மானியம் இவற்றால் கொழுத்த சென்னை எஸ்.ஐ.இ.டி. மகளிர் கல்லூரி நிர்வாகி, இந்த ஆண்டு, முதலாண்டு மாணவிகளை சேர்க்க மறுக்கிறார். இது மூடுவிழாவுக்கு முன்னுரை தானே!

இதற்குக் காரணமான (முன்னாள் நீதிபதி!) பஷீர் அகமத் சிறுபானமை போர்வையில் ஒளிந்து கொள்கிறார்.

அரசு அர்த்தமுள்ள மௌனத்தில் ஆழ்ந்துள்ளது. கல்லூரி அமைத்துக் கோடி கோடியாகச் சேர்த்த பிறகு நிர்வாகி அதை மூடிவிட சட்டம் பாதுகாப்புத் தருவது நியாயமா?

நியாயம் வேண்டி சென்னை முழுவதும் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இந்த அறப்போரில் தமிழக கல்வியுலகம் முழுவதும் விரைவில் பங்கெடுக்க விருக்கிறது. சிறுபான்மைப் போர்வையில் கொக்கரிக்கும் சிறு நரிகளிடம் இருந்து கல்வித்துறையைப் பாதுகாக்க எந்தத் தியாகத்திற்கும் ஆசிரியர்களும, மாணவர்களும் தயாராகி வருகிறார்கள்.

—சரவணபவன்

புலன் கடந்த உளவியல்:

# பிராணிகளுக்கும் அதீத அறிவுண்டா?

சாதாரண பிராணிகளான நாய், பூனை முதலியவற்றிற்குக் கூட அதீத அறிவு உண்டு என்ற பொது ஜனநம்பிக்கையில் உண்மையுண்டா?

இக்கேள்வி புலன்கடந்த ஆய்வாளர் கிரஹாம் வாட்கின்சுக்கு எழுந்தது. இதை பரிசோதிக்க, வாட்கின்ஸ் 'ஆவிநடமாட்டம்' உள்ளதாகக் கூறப்படும் ஒரு வீட்டுக்குத் தன்னுடன் ஒரு நாய், பூனை, எலி. பாம்பு முதலியவற்றைக் கூடவே கூட்டிச் சென்றார்.

அங்கு அவைகளின் நடத்தை மிகவும் அபூர்வமாகவும், குறிப்பிடத்தக்கதாகவும் இருந்தது. நாய் அவ்வீட்டின் ஓர் அறையில் நுழையும்போது குரைத்துப்பின் வாங்கியது. என்ன செய்தாலும் அது மீண்டும் அவ்வறைக்குச் செல்ல மறுத்தது. பூனையின் நடத்தையும் அவ்வாறே. அது அவ்வறையினுள் இருந்த வெற்று நாற்காலியைப் பார்த்து பலமாக உறுமியது. பாம்பு அதே நாற்காலியைப் பார்த்து சீறியது. எலி மட்டும் எந்தவிதத்திலும் அசாதாரணமாக செயல்படவில்லை. இதே பிராணிகள் மற்ற அறைகளில் சாதாரணமாகப் போய் வந்தன

இந்த அறையில் ஒரு துக்ககரமான, விபரீதமான சம்பவம் (கொலை) நிகழ்ந்தது பிறகு வாட்கின்சுக்குத் தெரிய வந்தது!

இப்பிராணிகளின் விசித்திர செய்கை எதை குறிக்கிறது? ஆவிகள் இருக்கின்றன என்பதையா? இருக்கத்தேவையில்லை. கொலை, தற்கொலை போன்ற துர்சம்பவங்கள் ஓரிடத்தில் நிகழும் போது, அப்படி இறப்பவரின் வலுவான எண்ணங்கள், உணர்ச்சிகள் அந்த இடங்களில், (டேப்பில் ஒலி பதிவதுபோல) பதிந்து போகக்கூடும். இந்த உணர்வுப் பதிவுகளே நுண்ணுணர்வுடைய பிராணிகளாலும் சில மனிதர்களாலும் உணரப்படுகின்றன.

ஆனால் எந்திர மயமாகிவிட்ட தற்கால மனிதனுக்கு இந்த அதீத அறிவு மிகவும் குறைந்து தொழிற்படுகிறது என்பது விஞ்ஞானிகள் கருத்து.

—ரமேஷ்

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

# ஓட்டல் வாடகை நாள் ஒன்றுக்கு ரூ.64,000

இதுவரை உலகில் எங்குமில்லாத அளவிற்கு விலை உயர்வுள்ள, அதி ஆடம்பர தி நூவே பார்க் ஓட்டல் பாரிசில் ஆரம்பித்திருக்கிறார்கள். இடது சாரி கட்சி ஆட்சி அமைத்துள்ள சோஷலிச பிரான்சின் ஒரு மாநில அமைச்சர் இதனைத் தொடங்கி வைத்திருக்கிறார்.

73 அறைகளும், குடியிருப்புகளும் (Suites) உள்ள இந்த ஓட்டலில் உள்ள "ராயல் சூட்" என்ற வெகு ஆடம்பர குடியிருப்புக்கு ஓரிரவு வாடகை மட்டும் ரூ 64,000 (உணவு சேர்க்கப்படவில்லை) இவ்வளவு அதிக வாடகை இதுவரை உலகில் யாரும் வசூலித்ததில்லை.

உலகத்தில் கோடீஸ்வரர்களான அரபு எண்ணெய் பணக்காரர்களின் பணத்தைக் கறப்பதற்காகவே, அரசு ஆதரவுடன் இவ்வோட்டல் அமைக்கப்பட்டிருக்கிறது.

ரூ 64,000 வாடகை வாங்க "ராயல் சூட்" இல் என்ன இருக்கிறது? இந்த குடியிருப்பின் பரப்பு 4500 ச. அடி. அறைக்கு வெளியே எப்போதும் தயாராக வண்டியோட்டியுடன் ஒரு ரோல்ஸ்ராய்ஸ் கார் நிற்கும். பாரிஸ் நகரத்தில் எங்கு வேண்டுமானாலும் இதில் ஏறிச் செல்லலாம். இதில் 7 படுக்கை அறைகள் அழகு வண்ண அறைகள், வசதி வழியும் குளியல் அறைகள், 3 மாடிப்பூந்தோட்டங்கள், எலக்ட்ரானிக் திருட்டுத் தடுப்பு அறிவிப்பு மணி, குண்டு துளைக்காத ஜன்னல்கள், தனிப்பட்ட எண்கொண்ட டெலெக்ஸ் இவை வழக்கமான ஆடம்பர வசதிகளை தவிர இருப்பவை.

இக்குடியிருப்புகள் 3 அடுக்கு கொண்டவை. ஒவ்வொன்றிற்கும் தனி மாடமும், மாடிப்பூங்கா சூழலில் அமைந்த நீச்சல்குளமும் உண்டு. உள் அறைகளின் வண்ணச் சேர்க்கை இந்த ஓட்டலின் சிறப்பு அம்சம்.

இரவுக்கு ரூ 1600 மட்டுமே வாடகை கொண்ட மலிவான அறைகளும் இங்குண்டு. எல்லா அறைகளிலும், 5 மொழிகளில் 100 படக்காசேட் நூலகம் கொண்ட விடியோ வசதி செய்யப்பட்டிருக்கிறது. நம் ஏழை நாடுகளில் தனிநபர் சராசரி ஆண்டு வருவாயே சுமார் ரூ 2000 ஆக இருக்கும்போது, வேறொரு பக்கம் செல்வம் இப்படித் தேவைக்கதிகமாக ஆடம்பரத்தில் விரயமாவது எவ்வளவு காலம்?

—இ. ஜே. சுந்தர்

60 லட்சம் குழந்தைகளுக்குத் தினம் ஒரு வேளை இலவச சத்துணவு வழங்க ரூ 100 கோடி செலவழிக்க முன் வந்துள்ளது தமிழக அரசு. அது போதாது என்றால் எத்தனை கோடியும் செலவழிக்கத் தயார் என்று எழுச்சிக் குரல் எழுப்பியுள்ளார் எம்.ஜி.ஆர்.

## சத்தமுள்ள சத்துணவுத் திட்டம்

மேம் போக்காகப் பார்க்கும் போது மிகப்பெரும் சாதனையாகவும், வறுமைக்கு குறியிட்ட அளவு தீர்வாகவும் கூட இந்த அறிவிப்புகள் தோற்றமளிக்கின்றன. ஆனால் இத்திட்டத்தின் நடைமுறை செயல்பாட்டையும், இத்திட்டம் எந்த அளவு மக்களுக்குப் பசியிலிருந்து விடுதலை தரும் என்பதையும் உன்னிப்பாக உற்று நோக்கினால் உண்மைகள் வேறாக இருக்கின்றன.

முதலில் இது எம். ஜி. ஆரின் செல்வாக்கை நிலைக்க வைக்க போடப்பட்ட சத்தான திட்டம் என்பதே அதன் விளம்பர வேகத்திலிருந்து தெரிகிறது. எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச சத்துணவு என்று பத்திரிகைகளில் தலைப்பு வந்தாலும, அரசு ஆணை 5 முதல் 9 வயது வரை உள்ளவர்களுக்கு மட்டும் என்கிறது இப்போது (31—5—73க்கு பிறகு பிறந்த குழந்தைகளுக்கு மட்டுமே). பாடம் நடத்த வேண்டிய ஆசிரியர்கள் சாப்பாட்டுக்கடை மேற்பார்வை யாளர்களாக மாறி 365 நாட்கள், ஈட்டுத்தொகை ஏதுமின்றி உழைக்க வேண்டிய நிலை. மேலும் ஒரு பள்ளியில், ஒரு பகுதியினருக்கு உணவு கொடுக்க முடியாத நிலையில்



(முதல் 3 வகுப்புகளுக்கே) தலைமை ஆசிரியரையும், பிற ஆசிரியர்களையும் இத்திட்டம் தர்மசங்கடமான சூழ்நிலையில் நிறுத்தியுள்ளது.

இப்படியே இத்திட்டம் தொடர தேவையான நிதிக்கு தெளிவான திட்டம் எதுமில்லை. 25 ஆண்டுகளுக்கு முன்பு காமராஜர் கொணர்ந்த திட்டத்தின் விரிவாக்கம் இது என்றால் 25 ஆண்டுகளுக்கு பிறகும் இதே நிலை தானா? கையேந்தும் தலைமுறையையே தொடர்ந்து உருவாக்கினால் அரசு தர்மம் போட்டு ஓட்டு வாங்க வசதியாக இருக்கும் என்பது தான் இதன் உள்நோக்கமா? தொடர்ந்து அடுத்த தலைமுறைக்கும் விரிக்கப்பட்ட கவர்ச்சி வலையா இது! வறுமைக்கு முட்டுக்கொடுப்பது வறுமையை எப்படித் தீர்ப்பதாகும்?

10 ஆயிரம் கிராமங்களில் ரூ 1 லட்சம், விதம் (10,000X ரூ 1 லட்சம் = 100 கோடி) சிறு தொழிலுக்கு அரசு இதே 100 கோடியை முதலீடு செய்தால்; நிரந்தரமாக பல குடும்பங்களில் மூன்று வேளையும் சத்துணவு அனைவர்க்கும் கிடைக்குமே!

சமீபத்தில் முஸ்லீம் விதவைப்பெண்களுக்கு எம். ஜி ஆர் சேலை வழங்கையில் அளித்த அறிவுரையை அவரே சிந்தித்துப் பார்க்கட்டும் :—

"இதைப்பார்த்து யாரும் பெருமைப்பட வேண்டியதில்லை. அவரவர் வீட்டில் அவர்களே சேலை வாங்கிக்கொள்ளும் நிலை வந்தால் தான் பெருமை" —எழில், பிரம்மநாயகம்.

---

எல்லா மாணவர்களும் போய் விட்டார்களா? என்று பார்த்து ஊர்ஜிதப் படுத்திக் கொண்டார். பிறகு உள்ளே வந்து அந்த மாணவனுடைய தேர்வு தாளை எடுத்துப் பக்கங்களைப் புரட்டினார் பகுதி "இ" இல் பக்கம் பக்கமாக காப்பி அடித்து எழுதியிருந்த இரண்டு கேள்விக்கான பதில்களைப் பேனாவால் அடித்தார். பிறகு எல்லாவற்றுடனும் ஒழுங்காக இணைத்து கொண்டு போய் கொடுத்து விட்டார்.

அரசு ஆசிரியர்களின் உயிருக்கு உத்திரவாதம் கொடுக்காத வரை மனசாட்சி உள்ள ஆசிரியர்கள் இதைத் தானே செய்ய முடியும்?

—ஜீ. மணிமொழி

---

## சிறுகதை

[ஒரு கல்லூரி மாணவர் தான் பார்த்து உணர்ந்ததைக் கற்பனை கலந்து சிறுகதையாக்கியிருக்கிறார். கையெழுத்துப் பத்திரிகை நடத்தும் இந்த இளைய எழுத்தாளரை ஊக்குவிக்கும் முயற்சியாக இதனை வெளியிடுகிறோம்.]

இறுதியாண்டு மாணவர்களுக்கு, கடைசி செமஸ்டர் தேர்வு நடந்து கொண்டிருந்தது. அது சற்று சிறிய அறை. சுமார் நாற்பது மாணவர்கள் தேர்வு எழுதிக் கொண்டிருந்தார்கள். மேற்பார்வைக்கு ஒரே ஒரு ஆசிரியரை மட்டும் தான் போட்டு இருந்தார்கள்.

தங்கள் மாமூல் செயல்களை ஆரம்பித்து விட்டார்கள். கடைசியில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்த ஒரு மாணவன் பாட புத்தகத்தைக் காலாலே இழுத்து எந்த வித பய உணர்ச்சியும் இல்லாமல் புத்தகத்தை மேசை மீதே வைத்து பகிரங்கமாக எழுதிக் கொண்டிருந்தான். ஆசிரியருக்குப் பொறுக்கவில்லை. சென்று புத்தகத்தைப் பிடித்தார்.

அவன் ஆக்ரோஷமாக எழுந்தான். கோபவெறி அவன் கண்களில் கொப்பளித்தன. இவ்வளவு மாணவர்கள் முன் தன்னை அவமானப்படுத்தியதாக அவன் நினைத்தான். "யோவ்! இப்ப என்னாங்குறே? ஏதாவது பேசினாக்க... (சென்னையில் மூன்று எழுத்துக் கொண்ட சிறப்புச் சொல்) பத்தை பத்தையா அறுத்து விடுவேன். என்னைக் காட்டிக் கொடுத்தினா நீ எங்கே இருந்தாலும் உன்னை சும்மா விடமாட்டேன். உன் ஃபேமிலியை இல்லாம பண்ணிடுவேன்." என்று கோபமாக கத்தினான்.

ஆசிரியர் சிந்தித்துப் பார்த்தார். ஒரு கணம் தன்னுடைய இரண்டு பிள்ளைகளும் ஆஸ்துமா மனைவியும் நினைவுக்கு வந்தார்கள். இப்பொழுது காட்டிக் கொடுத்து விடலாம். ஆனால் நமக்கு ஏதாவது ஆகிவிட்டால் நம் குடும்பத்தை யார் காப்பாற்றுவார்கள்? என்று எண்ணியவாறே அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

அவனுக்கு ஏதோ பெரிய போராட்டத்தில் வெற்றி பெற்றது போன்ற பெருமிதம். ஆசிரியரை தெனாட்டலாக பார்த்து விட்டு அமர்ந்தான்.

ஆசிரியருக்கு இந்த விஷயம் உள்ளத்தை மிகவும் உறுத்திக் கொண்டேயிருந்தது. மணி அடித்தது. எல்லோரும் வெளியேறி விட்டார்கள். எல்லோரும் சென்ற பிறகு வெளியில் போய்

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

# ஆங்கில மோகம் கொண்ட தமிழ் வேடதாரிகள்

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று வாய் கிழிய பேசும் நமது அ. தி. மு. க, தி. மு. க அரசியல் வாதிகளின் தமிழ்ப்பற்று எவ்வளவு போலித்தனமானது என்பது திடுக்கிட வைக்கிறது. ஊரையும், மக்களையும் ஏமாற்றவே இவர்கள் மொழி உணர்வைத் தூண்டி விட்டிருக்கிறார்களே தவிர, இவர்களுக்கு இதில் எள்ளளவும் பற்றில்லை என்பதை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நடத்திய ஆய்வு வெட்டவெளிச்சமாக்கியுள்ளது. இவர்களின் பிள்ளைகளைப் படிக்க வைக்க நகரின் மிக மேற்கத்திய நாகரிகம் கொண்ட ஆங்கில மணம் வீசும் உயர்தர பள்ளிகளையே தேர்ந்தெடுக்கிறார்கள்.

ஊருக்கெல்லாம் "சாகும்போதும் தமிழ்ப்படித்துச் சாகவேண்டும்" என்று உபதேசிக்கும் இவர்களின் குழந்தைகள் மட்டும் "பாபா ப்ளாப் ஷீப்" விருந்து தான் கற்கத் தொடங்குகின்றன!

தமிழினத்தலைவராக தி. மு. க வினர் வர்ணிக்கும் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியின் இரு மக்கள் ஸ்டாலின், முத்து இருவரும் கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளி என்ற பிரபல ஆங்கிலப் பள்ளியிலே கற்றவர்கள். கலைஞரின் மகளும், பேத்தியும் படித்துக் கொண்டிருப்பது ஆங்கில நெடி வீசும் சர்ச்பாக் கான்வென்டில் தான்-கலைஞர் மருமகன் முரசொலி மாறனின் இரு பையன்கள் படிப்பது சென்னையின் முதல்தர ஆங்கிலப் பள்ளியான டான் பாஸ்கோவில்தான்!

கல்வியமைச்சர் அரங்கநாயகம் மட்டும் சளைத்தவரா? கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் தான் அவர் மகன் சென்ற ஆண்டு படித்து முடித்தான். சுகாதார அமைச்சர் எச் வி. அண்டேயின் 3 பையன்களும் முடித்தது இதே ஆங்கிலப் பள்ளியில் தான்.

சட்ட அமைச்சர் பொன்னையனின் மகன் டான்பாஸ்கோவின் முன்னாள் மாணவன். அமைச்சரின் மருமகள் ரோசரி மெட்ரிக்குலேஷன் 11-வது வகுப்பு மாணவி. நிதியமைச்சர் 'நாவலர்' நெடுஞ்செழியனின் பேத்தி சேகரட் ஹார்ட்ஸ் கான்வென்டில் 2வது வகுப்பு மாணவி. அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி மகன் டான் பாஸ்கோ 7 வது வகுப்பு மாணவன். அவரது 2 பெண் பிள்ளைகளின் கல்வியும் சேகரட் ஹார்ட்ஸில் தான்!

நல்ல வேளை முதலமைச்சருக்குப் பிள்ளைகள் இல்லை. எம். ஜி. ஆரின் சகோதரர் சக்கரபாணியின் பேரன் டான் பாஸ்கோவிலும், இரண்டு பேத்திகள் ரோசரி மெட்ரிகுலேஷன் கான்வென்டிலும் ஆங்கிலக் கல்வி பயில்கின்றனர்.

**இவர்களின் பிள்ளைகள் அனைவரும் 2 வது மொழியாக, தமிழுக்குப் பதிலாக இந்தியை எடுத்துப் படிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.**

ஆங்கில துரைத்தன சூழலை வளர்க்கும் டான்பாஸ்கோவில் படிக்கும் பிள்ளைகளின் பிற முக்கிய தந்தையர் :—போக்குவரத்து அமைச்சர் எஸ் முத்துசாமி, கைத்தறி அமைச்சர் எஸ். என் ராஜேந்திரன், நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கே. ராஜா முகமது, சபாநாயகர் கே. ராஜாராம், துணை சபாநாயகர் பாண்டியன்.

செய்தித்துறை அமைச்சர் வீரப்பனின் செல்வியர் படித்து முடித்த ஆங்கிலப் பள்ளி ஆசர்ஷ் வித்யாலயா. உயர் ஆங்கில மகளிர் பள்ளி சுவார்ட்ஸ் இல் படித்து முடித்தது நாஞ்சில் மனோகரன் மகளும், பேராசிரியர் அன்பழகன் மகளும். படித்துக் கொண்டிருப்பது டாக்டர் கலாநிதியின் பெண்கள்.

பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் கே. வெங்கட சுப்பிரமணியத்தின் மகள் ரோசரி மெட்ரிக்குலேஷன் பள்ளியின் 7 வது வகுப்பில், இந்தியை விருப்ப மொழியாக தேர்ந்து, படித்து வருகிறாள். விவசாயத்துறை அமைச்சர் குழந்தை வேலுவின் மகளும் இதே பள்ளியில் படித்து வந்தாள்.

அறிஞர் அண்ணாவின் பேரப்பெண் படிப்பது ஆங்கிலப் பள்ளியான டவ்டன் கோரியில் 5 வது வகுப்பு. எம். ஜி. ஆரின் வளர்ப்பு பேரப் பையன்கள் செயின்ட் பீட்சில் படிக்கிறார்கள். கபாலி, எம். எல். ஏ. யின் இருபிள்ளைகளும் கூட படிப்பது இதே ஆங்கிலப் பள்ளியில் தான்.

சென்னையில் தமிழை பயிற்று மொழியாகக் கொண்ட பிரபல பள்ளிகளான சாரதா வித்யாலயா, ராமகிருஷ்ண மிஷின் உயர்நிலைப்பள்ளி, நேஷனல் உயர்நிலைப்பள்ளி போன்றவற்றை அணுகிக் கேட்டதில் பிரபல அரசியல் பிரமுகர்களின் பிள்ளைகள் யாரும் அங்கெல்லாம் படிப்பதில்லை என்று தெரிய வருகிறது.

—(இந்தியன் எக்ஸ்பிரசிலிருந்து : ஸ்டேனிஸ்லாஸ்)

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

நாம் அறிய வேண்டியவர்கள்:

# இரா. கணேசன்



நெஞ்சில் உரத்தோடும், நேர்மைத் திறத்தோடும் நின்று சமூக அநீதிகளைத் தட்டிக் கேட்பவர்கள் இன்னும் இருக்கவே செய்கிறார்கள். இதற்குப் பரிசாக இந்தச் சமூகம் தண்டனைகளை அளித்தாலும், இவர்கள் துணிந்து முன்னேக்கிச் செல்கிறார்கள். கல்வித் துறையில் பொறியியற் துணை பேராசிரியர் இரா கணேசன் ஒருவர். பணமோ, அதிகாரமோ, பதவி ஆசைகளோ இவரை அசைத்ததில்லை. யாருடனும் சமரசம் செய்து கொண்டு போராட்டங்களைப் பிசுபிசுக்க விட்டதில்லை; பின்வாங்கியதுமில்லை; இவரைப்பற்றி தெரியாதவர்களுக்கு இவரை இங்கு அறிமுகப்படுத்துகிறோம்:—

☐ பின்தங்கிய விவசாய குடும்பத்தில் பிறந்திருந்தும், எல்லா வகுப்பிலும் உயர் மதிப்பெண்களே பெற்று, பி. எஸ். ஜி பொறியியற் கல்லூரியில் பி. இ. பட்டத்தை சிறப்புற முடித்து, எம். எஸ் முதுகலை படிப்பில் சேருகையில் முதல்வர் நிதிக்கு கட்டாய நன்கொடையை (முதல்வர் ஆர். தாமோதரன்) கேட்டார்கள். கட்டாயமாக வசூலிப்பது எப்படி நன்கொடை யாகும்? என்று கொடுக்க மறுத்தார். எனவே எளிதாக கிடைத்திருக்க வேண்டிய எம். எஸ் உயர்படிப்பிற்கு அனுமதி மறுத்தார்கள். விடுதியை விட்டும் அப்புறப்படுத்தினார்கள்.

☐ சென்னை அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரியில் துணைப் பேராசிரியராக இருந்து, சென்னைப் பல்கலைக்கழக செனட் உறுப்பினராக இருந்தபோது இதுவரை யாரும் எதிர்த்துக் கேட்காத துணிவுடன் பல்கலைக்கழக ஊழல்களைச் சாடினார். செனட்டுக்கு துணைவேந்தர் மால்கம் ஆதிசேஷையா தலைமை தாங்கக்கூடாது என்றார். அது ஜனநாயக முறையில் இயங்க மறுப்பதைக் கண்டித்தார்.

☐ முதுகெலும்புள்ள உறுப்பினராக இப்படி ஒருவர் இருப்பதை பல்கலைக்கழக உயர்மட்டம் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அன்றைய அவசரநிலையைப் பயன்படுத்தி அவரைப் பொறியியற் கல்லூரியிலிருந்து வெளியேற்றினார்கள்.

☐ இவர் மேல் சாட்டப்பட்ட குற்றங்கள் :—ஆசிரியர் தின விழாவில் கலந்து கொண்டு பேசியது. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழிற்குக் கடிதம் எழுதியது.

☐ ரிட்மனுபோட்டு 5 மாதங்களுக்குப்பிறகு நீதிமன்றம் அவரது வேலை நீக்க உத்தரவை வாபஸ் பெறச் செய்தது.

☐ புதிதாக அண்ணா பொறியியற் பல்கலைக்கழகம் தோன்றியவுடன் அதன் மூன்று கல்லூரிகளிலும், வெவ்வேறு வேலை நிலைமைகள் இருப்பதைக் கண்டித்து, ஒரே மாதிரி நிலைமைகள் விளங்கப்பாடுபட்டார்.

☐ ஆசிரியரல்லாத பொறியியற் கல்லூரி பணியாளர்களுக்கு நீதிபதி கிருஷ்ணய்யர் தீர்ப்பின் அடிப்படையில் தொழிற்சங்கம் அமைக்கும் அந்தஸ்து உண்டு என்று சொல்லி தொழிற்சங்கம் அமைக்கக் காரணமானார்.

☐ அடிப்படை பிரச்சனைகளை தீர்க்கசொல்லி சி, ஏ. பொறியியல் தொழில் நுட்பக் கல்லூரி தொழிற்சங்க தலைவராக கல்வியமைச்சர் அரங்க நாயகத்தைச் சந்திக்கச் சென்றபோது, அமைச்சர் காண மறுத்தாராம். 'நீ தலைவராக இருக்கக் கூடாது' என்றும் எச்சரித்தாராம்.

☐ ஏற்கனவே இருந்த இத்தொழிற்சங்கத்தை நசுக்க, அரசு ஆதரவுடன் இக்கல்லூரியில் ஒருபோட்டி தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டு அமைச்சர்கள் தலைமையில் ஆபெரும் துவக்க விழா ஏற்பாடாகியிருந்தது. அதற்கு இவரும் இவரது சங்க உறுப்பினரும் கருப்புக்கொடி காட்டியதால், கைதுசெய்யப்பட்டு ஒரு மாதம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

☐ இரண்டாம் முறையாக இரா. கணேசன் பணி நீக்கம் செய்யப்பட்டார். வழக்கம் போல ஜோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள். 'பொய் முகங்கள்' என்ற பத்திரிகையை ஆசிரியராகஇருந்து நடத்தியது முக்கிய குற்றச்சாட்டு.

☐ உயர்நீதி மன்றத்தில் இவர் வழக்கு தொடர்ந்தார். ஆனால் இவருக்கு எதிரான தீர்ப்பு வழங்கப்பட்டது

☐ கடந்த சில மாதங்களாக பணியிழந்துள்ள இவர் மீண்டும் உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்துள்ளார்.

☐ இவர் அதிகாரிகளுடன், அரசுடன், சமரசம். செய்து கொண்டிருந்தால் மிக உயர்ந்த பதவிகள் கிடைத்திருக்கக்கூடும்

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

ஐவரது உடன் பயின்றோரும், மாணவரும் கூட பேராசிரியர்களாகவும், துணை வேந்தர்களாகவும், தலைமைப் பதவிகளில் இருக்கிறார்கள். மிகச் சிறந்த மாணவனாக இருந்தது போலவே மிகச் சிறந்த ஆசிரியராகவும், மாணவர்கள் உளம் கவர்ந்தவராகவும் விளங்குபவர் கணேசன்.

■ "ஆசிரியர்கள் ஓரணியில் திரண்டு அவர்கள் வகுப்பறைகள் வழியாகவே நாடு தழுவிய ஒரு சமுதாயப் புரட்சி மிக விரைவில் ஏற்படும் என்பதாலேயே, அரசு ஆசிரியர்களுக்குத் தொழிற் சங்க உரிமை அளிக்கத் தயங்குவதோடு, அவர்கள் நியாயமான எழுச்சியை தீவிரமாக அடக்குகிறது" என்கிறார் கணேசன். —பேட்டி: எழில் [illegible]

# வாசகர் குரல்

★ தமிழக அரசின் மதிய உணவு திட்டத்தால் ஆசிரியர்களின் நிலை மிகவும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளது. உணவிற்கு தேவையான காய்கறிகளை வாங்க அலைவதால் பாடம் சொல்லி தருவதற்கான வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. இத்திட்டத்தினால் பள்ளிக்கு வரும் குழந்தைகள் தொகை வேறு அதிகரித்து உள்ளது. ஆசிரியர்களின் கஷ்டத்தை உணர்ந்து இத்திட்டத்திற்கான பொறுப்புகளை கவனிக்க வேறு ஆட்களை நியமித்தால் வேலை வாய்ப்பும் பலருக்கு கிட்டும். இல்லையெனில் இந்த பிரச்சனை போராட்டத்திற்கு வழிவகுக்கும்.

**ஆசிரியர்கள் சார்பாக, மு. ஆறுமுகம்**
**உடுமலைப்பேட்டை**

★ கல்மந்தையில் கட்டித் தரப்பட்ட முதல் குடிசை மாற்றுக் குடியிருப்பில் மொத்தம் 64 வீடுகள் உள்ளன. இங்குள்ள சுமார் 500 தாழ்த்தப்பட்ட குடும்பங்களில்| 5குடும்பங்களே இந்த வீடுகளில் இடம் பெற்றுள்ளன. தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகள் சில பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. துப்புரவாளர் ஒருவரின் வீடு ஆளும்கட்சி பிரமுகர் ஒருவரால் கட்சி அலுவலகம் என கூறப்படுகிறது. கோரிக்கைகள் பல வீட்டு வசதி வாரியத்திற்கும் கொடுத்தும் பயனில்லை. எந்த உதவியும் இன்றி இவர்கள் நசுக்கப்பட்டு வருவதற்கு முடிவு என்ன?

**G. பாண்டியன் கல்மந்தை**


## காது நன்றாகக் கேட்க வேண்டுமா?

காது மந்தத்தன்மை மிகவும் மோசமாகும் வரை காத்திருக்காதீர்கள். நாங்கள் உதவி செய்ய காத்திருக்கிறோம்.

**இயர் எய்ட்ஸ்**

4, வடக்கு உஸ்மான் ரோடு,
தீ. நகர், சென்னை-600 017


★ தஞ்சைக்கு தெற்கே உள்ள ஒரத்த நாட்டில் உள்ள வட்டா
சிரியர் அலுவலகத்திற்கு, அதே வட்டத்தை சேர்ந்த சோழகன்
குடிக்காடு என்ற ஊரிலிருந்து மேற்படிப்புக்காக பள்ளி
மாணவர்கள் வருமான, சாதி சான்றிதழ்களில் கையெழுத்து
வாங்க சைக்கிளில் இருவர் இருவராக செல்கின்றனர். ஆனால்
கையெழுத்து வாங்குவதற்கு அங்குள்ள ரெவின்யூ இன்ஸ்பெக்
டருக்கு ஒரு படிவத்திற்கு ரூ.1/- தரவேண்டியுள்ளது. மறுத்தால்
பல நாட்கள் அலைய வேண்டும். இவர்களை யார் கண்டிக்க
போகிறார்கள்? **சின்னையன், சோழகன் குடிக்காடு**

★ சென்னை பெரிய தெருவில் அரசு நகர நூலக ஆணைக்குழு
வால் ஒரு பொது நூலகம் நடத்தப்படுகிறது. ஆனால் அங்கு
இரவில் படுத்துத் தூங்குபவர்கள் தங்கள் காலைகடன்களை
அங்கேயே முடிப்பதால் ஏறக்குறைய இரண்டு மாதகாலமாக
இந்த நூலகம் மாநகராட்சி கழிப்பிடமாக இயங்கி வருகிறது.
இதனால் நூலகத்திற்கு வருபவர்கள் நிலைபரிதாபகரமாக உள்ளது.
இருக்கின்ற 4 ஊழியர்களின் வேலை நேரமும் குறைக்கப்பட்டுள்
ளதால் நிலை இன்னும் மோசமாக உள்ளது. இப்பிரச்சனை ஒரு
தீர்வுகாணுமா? **ஸ்ரீதர் கோட்டூர், சென்னை-85**

★ அஞ்சல் நிலைய சேவிங்ஸ் பாங்கில் கணக்கு வைத்திருக்கும்
படிக்காத கிராம மக்கள் உரிய ஃபாரங்களை நிரப்ப முடியாமல்
தவிப்பதைகண்டும், கவுண்டரில் இருப்பவர்கள் சட்டம் பேசி
அவர்களின் நிலை அறியாது உதவ மறுக்கிறார்கள். சுற்றி இருப்ப
வர்கள் தங்கள் அவசரத்தை கூறி ஓடிவிடுகிறார்கள். இவர்களுக்
காக அரசாங்கம் படித்த ஊனமுற்றவர்களை வேலைக்கு அமர்த்த
லாமே? **—நல்லா குளத்தான் நல்லா குளம்**

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

எழுத்தாளர்

# நா. பார்த்தசாரதி

நா. பாவின் தமிழ்ச் சொற்கள் நயமும், நளினமும், ஆரவாரம் இல்லாத அழகும் ஆழமான பொருண்மையும் நிறைந்து நிற்பன. நா. பாவின் முப்பெரும் நாவல்களாக குறிஞ்சி மலரும், பொன் விலங்கும், மணிபல்லவமும் ஒரு காலத்தில் ஏராளமான வாசகர்களைப் பாதித்ததை மறப்பதற்கில்லை. காந்தியின் அச்சாக இருக்கும் ஒரே நபரே குறிஞ்சி மலரில் அரவிந்தனாக, பொன் விலங்கில் சத்தியமூர்த்தியாக, மணிபல்லவத்தில் இளங்குமரனாக விளங்கக் காண்கிறோம்.

காதல் தான் உலகம் என்பதோ, இமயம் போன்ற கொள்கைக் குன்று தான் கதாநாயகர்கள் என்ற அசாதாரண கற்பனைகளோ மக்களை விட்டு வெகு தூரம் விலகியேயுள்ளன. அன்றாட வாழ்வின் அடிப்படைப் பிரச்சனைகளை அப்படியே சுட்டும் எழுத்துக்களும் உள்ளன. இதில் நா. பா எந்த அணி என்று சொல்லத் தேவையில்லை.

கானல் நீரான காதலும், வெறித்தனமான குறிக்கோள் பிடிப்பும், நிறைந்த ஒருவனின் கொள்கை வாழ அவன் சாகும் கொடுமையைக் குழைத்து வாசகனின் இரக்கத்தில் வாழ நினைக்கும்பாத்திரங்களையேஅவரது பெரும்பாலான நாவல்களில் பார்க்கிறோம்.

ஆக்கப்பூர்வமான சிந்தனைகளும்; அறிவுப்புரட்சியும் கை கோத்து யுகசந்தியை நோக்கி விரையும் காலக் கட்டம் இது, எனவே பொழுது போக்குக்காகப் பயன்படும் நா. பாவின் நாவல்களும் பொன் விலங்குகள் தானே?

நா. பா எழுத்துக்களில் தரம் தாழ்ந்த ஆபாசமில்லை என்பது உண்மை தான். ஆனால் ஆபாசம் மட்டுமே தீமையானது அல்ல; இன்றைய பிரச்சனைகளிலிருந்து வாசகர்களைத் திசை திருப்பிச் செல்வதும் கூட தவறானது தான்.

கொள்கைப்பிடிப்பும், குணக்குன்றேறி நிற்கும் தன்மையும் இவரது கதாநாயகர்களுக்கு உள்ள அளவுக்கு இவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தால் அடிக்கடி திசைமாறும் இவரது அரசியல் சார்பெழுத்துக்கள் பொருளின்றியல்லவா போய்விடும்

நா. பாவே கூறுகிறார், "திரு. வி. கவும், திலகரும் பத்திரிகை நடத்திய நாட்டில் மையை மெழுகிக் காகிதம் விற்போரும், பொய்யை மெழுகிக் காகிதம் விற்போருமாக, புனிதமானதொரு பணியை வியாபாரமாக நடத்துகிறவர்கள் பெருகியுள்ளனர்" (பொன் விலங்கு)

இதை உண்மையிலேயே மாற்ற வேண்டும் என்பதில் நா. பாவின் பங்கு தான் என்ன?

—சரவணபவன்

## நோஞ்சானாக இருக்கிறீர்களா?

ஒரு சிலர் எவ்வளவு தான் சாப்பிட்டாலும் ஒல்லி குச்சியாகவே இருக்கிறார்கள். பலருடைய கேலிக்கு உள்ளாகிறார்கள். கொழுப்பை எடுத்துக் கொள்ளும் திறன் அந்த உடம்புக்கு இல்லாததே இதற்குக் காரணம். இதை வளரும் பருவமாகிய 25 வயதுக்குள் பெற்றோர்கள் கண்டறிந்து கொள்ள வேண்டும். இந்தக் குறையிலிருந்து நிச்சயம் மீள வழியுண்டு.

சக்திக்கு மேல் விலையுயர்ந்து வரும் மாமிசம், முட்டை மட்டுமே சதை போடுவதற்கு அவசியமானவை அல்ல. மரக்கறி உணவுப் பட்டியலில் ஏராளமான பொருள்களில் கொழுப்பு புரதம், உயிர்ச்சத்துக்கள் (விட்டமின்கள்) யாவும் நிறைந்து இருக்கின்றன.

பால், வெண்ணெய், தினசரி சாப்பிட முடியாதவர்கள், வேர்க்கடலையை அன்றாட உணவில் இயன்றவரை சேர்த்துக் கொள்ளவும். தினமும் இரவு படுக்கப்போகும் போது இரண்டே இரண்டு பாதாம் பருப்பை (50 காசு) எடுத்துத் தண்ணீரில் ஊறப்போடுங்கள். மறுநாள் காலையில் அவற்றை அரைத்துப் பாலில் கலந்து சாப்பிடவும். விரைவாக நோஞ்சான் உடம்பை பருக்க வைக்கும் சிறந்த உபாயம் இது.

பொதுவாக ஒல்லியாக இருப்பவர்கள் ஒரே சமயத்தில் நிறைய சாப்பிடுவதை விட அடிக்கடி சிறு உணவு. கொள்ளுதல் நலம். உணவில் பொன்னாங்காணி (பொன் ஆம் காண் நீ) போன்ற கீரை வகைகளை நிறையச் சேர்க்கவும். பிடிப்பிடியாய்ச் சதை போடும்.

ஒல்லியாக இருப்பவர்களுடைய முதல் பிரச்சனை பரபரப்பான பசியும், உணவில் வேட்கையும் இல்லாதிருப்பதே. எனவே பரபரப்பான பசியிருக்குமாறு முதலில் செய்ய வேண்டும். நல்ல பசியிருந்தால் உணவை ஒரு பிடி கூடவே உண்ண முடியும்.

—கூட்டி பாரதி

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

# தினமணி

கோயெங்கா என்ற பத்திரிகை வியாபாரி, தமிழகத்து அறிவுஜீவிகளை வசீகரப்படுத்தும் நோக்குடன் ஆரம்பித்தது தான் தினமணி. முன்பு ரயிலில் அல்லது பஸ்ஸில் யாரேனும் தினமணி வைத்திருந்தால், அவரை ஏக வசனத்தில் பேசவே மற்றவர்கள் தயங்கும் அளவிற்கு இது "கௌரவமானவர்கள்" படிக்கும் பத்திரிகை என்ற முத்திரையைப் பெற்றது.

தொடக்க காலத்தில் திரு டி. எஸ் சொக்கலிங்கம் ஆசிரியராக இருந்தார். மிகவும் நல்லவராக, கொள்கையுடையவராக இருந்ததால் அவர் ரொம்ப நாட்கள் தாக்குப்பிடிக்க முடியவில்லை பிறகு ஏ. என் சிவராமன் ஆசிரியராக உயர்த்தப்பட்டார். இன்றைய தினமணியின் வாழ்வுக்கும் கொள்கைக்கும் இந்தத் தனி நபரே காரணம்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் தினமணிக்கு இருந்த நாட்டுப்பற்று வெள்ளையர் ஆட்சி மாறிய பின்பு, குறிப்பாக காங்கிரசிலிருந்து ராஜாஜி விலகியதில் இருந்து, வேறு திசையில் திரும்பி தற்போது அமெரிக்க விசுவாசமாக மாறி விட்டு இருக்கிறது.

இதன் ஆசிரியர் தான் சொல்ல வந்த சேதியை தெளிவாக விவரமாக சொல்ல வல்லவர். மொழியாக்கம் செய்வதில் வல்லவர் ஜெர்மன் போன்ற ஐரோப்பிய மொழிகள் உட்பட பல மொழி தெரிந்தவர் வேதமும் படித்தவர். அச்சுக்கோப்பது கூட அறிந்து, தானே சில நேரங்களில் அதனையும் செய்ததுண்டு.

இவ்வளவு திறமை படைத்த இதன் ஆசிரியர் நடத்தும் தினமணியைக் காட்டிலும், விழிப்புணர்ச்சியுடைய தமிழர்கள் இந்தியன் எக்ஸ்பிரசையே இப்போது நாடுகிறார்களே ஏன்?

காரணம், பக்கத்துக்குப் பக்கம், பத்திக்குப்பத்தி செய்திகள் செய்திகளை மட்டுமே தரும் ஒரே செய்தித்தாள் தினமணிதான். முன்னாள் முதல்வர்களிலிருந்து இன்னாள் அரசியல் தொண்டர் வரை தினமணியைத் தங்களுக்கு அன்றாட செய்திப் பெட்டகமாவே (Press Infurmation) பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

தலைப்புச் செய்தி "கென்யாவில் அதிரடிப் புரட்சி தோல்வி" என்பதற்குப் பக்கத்தில் அதிபர் ஆரல் மோய் படம். பின் பெட்டிச் செய்தி "யானையைத் தாக்க முயன்ற காளை மாடு" தஞ்சாவூர் அருகே என்றிருக்கும். முதல் பக்கத்திலேயே இந்த 2 விஷயங்களும் ஒரே முக்கியத்துவத்துடன் காணப்படும்.

கோயெங்காவின் இந்தியன் எக்ஸ்பிரஸ் தமிழ் நாட்டுக்கு செய்திருக்கும் சேவையில் 10% வது தமிழ் இதழான தினமணி செய்திருக்கிறதா என்றால் இல்லையென்ற பதிலே வருகிறது. இந்தியன் நாட்டில் நடக்கும் அநீதிகளையும், அக்கிரமங்களையும் இந்தியன் எக்ஸ்பிரஸ் அம்பலப்படுத்திய விவரத்தை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் தினமணியோ அதற்கெல்லாம் அப்பாற்பட்ட அந்தரத்தில் தொங்கும் உலகத்தில் தான் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறது.

தமிழில் வெளிவரும் மற்ற நாளேடுகள் குறிப்பிட்ட கட்சி இதழ்களாகவே வெளிப்படையாகத் தெரிகின்றன. ஆனால் தினமணி தன்னை அப்படி ஒரு போதும் காட்டிக் கொண்டதில்லை. ஆனால் எப்போதும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் நலனைத் தவிர வேறெதையும் அது சார்ந்து நின்றதில்லை.

மேட்டுக்குடி மக்களை எதிர்த்து அரசோ போலீசோ ஆளும் மக்களோ நடத்தும் அராஜகத்தைத் தினமணி ஒரு போதும் வெளியிட்டது இல்லை. எல்லா நாளிதழ்களும் சூடுபறக்கும் சமூகப் பிரச்சனைகளை எழுதி ஓய்ந்து விட்ட பின்னரே, "எனக்கென்ன ஆயிற்று! நானும் சொல்லி விடுகிறேன்!" என்ற பாணியில் தான் தினமணி அந்த சமூகப் பிரச்சனைகளை வெளியிடும்.

தகர்ந்து வரும் அமைப்பைத் தூக்கிப் பிடிக்கும் அரசையும் சாராமல், அரும்பி வரும் அமைப்புக்காகப் போராடும் மக்கள் இயக்கங்களையும் சாராமல் நடுநிலையாக ஒரு நிறுவனம்— அதிலும் செய்தித் துறையின் நிறுவனம் பணியாற்றுகிறது என்றால் அது வேஷம் தான்; நயவஞ்சகமானதுங்கூட. அதைத் தான் தினமணி செய்து வருகிறது.

☐ ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி சுட்டி வெளிவரும்.
☐ 12 இதழ்கள் அஞ்சலில் பெற ஆண்டு சந்தா ரூ. 4-00
☐ ஆயுள் சந்தா: ரூ 150 (ரூ 25 வீதம் 6 தவணைகளிலும் கட்டலாம்)
☐ எல்லாத் தொடர்புகளுக்கும்:—
ஆசிரியர்குழு, 'சுட்டி' K-105, அண்ணாநகர், சென்னை-600 102

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

**சுட்டி விற்பனையாளர்கள் தேவை:**— சுட்டி விற்பனையாகாத எல்லா ஊர்களிலும் தேவை. சுட்டியின் வளர்ச்சியிலும் கொள்கையிலும் ஆர்வம் இருந்தால் நல்லது.

நாளிதழ் அமைப்பில் கூட, மாற்றம் ஏதும் காணுது மார்க்கண்டேயனுக இருந்து புராணீக முறை செய்தியமைப்பைத் தான் காண முடிகிறது. அச்சு தோற்றம், செய்திகளை விவரிக்கும் எழில் ஆகியவற்றில் சமீபத்தில் வந்த நாளேடுகள் கையாளும் புது புது உத்திகள் பற்றி தினமணி வணிகப்போட்டியாகக் கூட நினைத்துக் கவலைப்படுவதில்லை. 'ஸ்ரீமான்' காலத்திலிருந்து 'மாண்புமிகு' காலம் வரை சட்டசபையை 'அசெம்பிளி' என்றும், நாடாளுமன்றத்தை 'பார்லிமெண்டு' என்றும் பயன்படுத்தி பழம்பிடிவாதம் பிடித்து வருகிறது.

ஞாயிற்றுக் கிழமைகளில் வரும் தினமணி சுடர் கூட வெளிச்சமின்றியே வருகிறது. சிறுகதைகள் பழைய காலத்துப் பாணியில் "ஜம்புலிங்கம் செட்டியார்" என்று ஆரம்பித்து முடியும். ஆயுள் வாசகர்களான பழைய காலத்து ஜிப்பாக்களைத் திருப்திப்படுத்த கோயில்களைப் பற்றிய ஒரே மாதிரி கட்டுரைகளும், சங்கராச்சாரியார் போன்றோரின் ஒரே பாணி அருளுரைகளும் வாரந்தவருமல் இடம் பெறும்.

இதன் காரணமாகத்தான் தினமணியின் வாசகர் வட்டமும் மாற்றம் ஏதும் இல்லாமல் எண்ணிக்கையில் கூட்டல், குறைச்சல் இல்லாமல் அப்படியே இருக்கிறது

எப்போதாவது அத்தி பூத்தாற்போல இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரைகளை மொழி பெயர்த்து வெளியிடும்போது தினமணியில் சூடு பிடிக்கிறது. மற்ற நாட்களில் அழுது வடிவதைத் தவிர அது வேறெதையும் செய்வதில்லை.

தினமணி முன்னேற வேண்டும்—தமிழ் உலகில் அதன் தரம் ஏறவேண்டும் என்று கோயெங்கா கருதினுல்—சிவராம்ஜி கனவிலும் அதைப்பற்றிக் கவலைப்பட போவதில்லை—தினமணியின் பாணி இந்தியன் எக்ஸ்பிரஸ் வழியில் சென்றால் தான் நடக்கும்.

(அடுத்து "தாய்") **காஞ்சி, மேகநாதன்**



☐ ராஜீவ் காந்தியை மத்திய அமைச்சராக்குவதற்கான தகுதிகளை மெல்ல மெல்ல ஏற்படுத்திக் கொண்டு வருவதாக செய்தி வருகிறது. கடந்த ஓராண்டாக மாநில அரசுகளுடன் நிறைய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டும், அமைச்சு வேலைகளில் அனுபவங்களை பெற்றும் வருகிறாராம். செய்தி, ஒலிபரப்பு அமைச்சராக உள்ள வசந்த் சாதேயின் பதவி இவருக்கு தரப்படவிருக்கிறது. சாதே வெளியுறவு அமைச்சராகவும், நரசிம்மராவ் உள்துறை அமைச்சராகவும் இடம் மாறுகிறார்களாம்



ஜனாதிபதி ஆனபின் 'ரப்பர் ஸ்டாம்பாக இருக்க மாட்டேன்' என்று உறுதி கூறும் முன்னாள் உள்நாட்டு அமைச்சர் ஜெய்சிங் உதிர்த்த முத்து :— "இறைவனும் இயற்கையும் இணைந்து இந்தியாவுக்கு அளித்துள்ள கொடையே ராஜீவ்" — தேவி



"வழக்குரைப்பவன் தமிழன், எதிராக வழக்காடுபவன் தமிழன். நீதிபதியும் தமிழன். ஆனால் யாருக்காக வேறு மொழியில் கத்துகிறார்கள் என்பது தெரியவில்லை"
—பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து-நன்றி: **தமிழ்ச்சுடர்**



☐ புகையொழிப்பைத் தீவிரப் படுத்த ஹாங்காங் அரசு மும்முரமாக இறங்கியுள்ளது. புகை அனுமதியில்லா பொது இடங்களில் புகைத்தால் ரூ 1530 அபராதம் விதிக்க புது சட்டம் போடப்பட்டுள்ளது. புகை பிடிக்கும் நபர் பிடிக்கப்பட்டு, தன்னை பற்றி விவரம் தராமல் ஆணவமாக இருந்தால் மேலும் ரூ 4600 அபராதம் உண்டு. இங்கு சிகரெட் பாக்கெட்டுகளில் சிறு எழுத்து எச்சரிக்கையோடு சரி; பொது இடத்தில் புகை பிடித்ததற்காக இங்கு யாரும் தண்டிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

# தலைநகரிலிருந்து மோசடி

இந்தியத் தலைநகரிலிருந்து வரும் நூதன விளம்பர மோசடிகளைப் போல உலகில் வேறு எங்கும் பார்க்கமுடியாது. விற்பனை பெருக்கத்திட்டம் என்று தலைப்பிட்டு சில எளிமையான கணக்குப்புதிர்களை அல்லது சில பொது அறிவு கேள்விகளைப் பூர்த்தி செய்து அனுப்பினால் முதல் பரிசு டெலிவிஷன், டேப்ரிகார்டர், மிக்சி, அதுஇது என எல்லா மொழி பத்திரிகைகளிலும் அறிவிப்பு விளம்பரங்களைச் சளைக்காமல் கொடுக்கிறார்கள் சில வடநாட்டு பகல் கொள்ளையர்கள்.

அதிர்ஷ்டம் இருந்தால் கிடைக்கட்டும் என்று ஒன்றுமறியா மக்கள் எழுதியனுப்புகிறார்கள். அனுப்பிய 20 அல்லது 25 நாட்களில் வீட்டிற்கு ஒரு கவர் வரும். பிரித்தால் :—

"நீங்கள் எமது போட்டியில் பங்கு பெற்றமைக்கு வாழ்த்துக்கள் அப்போட்டியில் நீங்கள் ஆறுதல்பரிசு பெற்றுள்ளீர்கள். மேற்கண்ட அளவு பணம் செலுத்தி பாதிவிலையில் டெலிவிஷன், டேப்ரிகார்டர், மிக்சி உங்களுக்கு எது விருப்பமோ அதைப்பெறலாம். இப்போது இத்துடன் உள்ள மணியார்டர் பாரம் பூர்த்தி செய்து பொருட்களை அனுப்புவதற்கு தபால் செலவு மட்டும் அனுப்புக; பொருள் வி.பி.பி.யில் வந்தவுடன் மீதிப்பணம் கட்டி பெற்றுக்கொள்க" என்று அச்சடித்த நோட்டீசை அனுப்புவார்கள்.

ஆஹா! ஆறுதல் பரிசாவது கிடைத்ததே என்று மகிழ்ச்சியுடன் தபால்செலவை அனுப்பி விட்டு காத்திருக்கும் ஒருநாள் தபால்காரர் வீடுதேடி பெரிய பார்சலைக் கொண்டுவர மகிழ்ச்சியோடு வி.பி.பி. பணம் கட்டி, தபால்காரருக்கும் 'டிப்ஸ்' கொடுத்து பார்சலைப் பிரித்தபின் 'குய்யோ முறையோ' என அடித்துக்கொள்வது வேதனையான விஷயம்.

அழகான பாக்கிங்கில் செங்கல்லும் வைக்கோலும் இருக்கும்; அல்லது கனமான கட்டைகள் இருக்கும்; அல்லது பெரிதாகத் தோற்றமளிக்கும் கனமான பொருட்கள் ஏதேனும் இருக்கும்; பணம் கட்டி வாங்கி ஏமாந்தபின் யாரைச் சாடுவது? அக்கம்பெனிக்கு கோபமாகக் கடிதம் எழுதினால் பதிலே வராது.

பணம் இருந்து, இவ்வாறு மோசடி செய்தார்கள் என்று கேஸ் போட்டால் அந்த மாதிரி கம்பெனியே கிடையாது என்பது புரியவரும். வெறும் அஞ்சற் பெட்டி எண் தானே கம்பெனி! அதற்கு இடம் ஏது?

டில்லியிலும், சுற்று வட்டாரங்களிலும் தினம் தினம் இப்படித் திடீர் கம்பெனிகள் தோன்றி மோசடி செய்து மறைந்து வேறு பெயரில் புது கம்பெனி ஆரம்பிக்கின்றன. டில்லி அஞ்சல் துறைக்கும், கம்பெனி அலுவலக, அரசியல் வட்டாரங்களுக்கும் இவை தெரிந்தும் கண்டு கொள்ளாமல் விட்டு வைப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது! உள்கை ஏதும் இருக்குமா?

பத்திரிகைகள் இந்த விளம்பர மோசடி பற்றி தெரிந்தும், தொடர்ந்து இம்மாதிரி விளம்பரங்களைக் காசுக்காக வெளியிட்டு வருவது வெட்கக் கேடானது?

—கே. ராமச்சந்திரன்

# எமக்கு வந்தவை

__வழிகள்:__ (சைக்லோஸ்டைல் மாத இதழ்) 15/ஏ, பொள்ளாச்சி ரோடு, ப. வடுகபாளையம், அஞ்சல் பல்லடம் —638664 ஆசிரியர்: இரா. தண்டபாணி, விலை: இலவசம்

__தமிழ்ச்சுடர்:__ (தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்) 24G, குமரன் நகர், இலட்சுமிபுரம் பழனி. R. S. 624602 பொறுப்பாசிரியர்: மணிமுத்து. தனியிதழ்: 75 காசு.

__விடிவு:__ (இலக்கிய மாத இதழ்) 325, இ. எச். ரோடு, வியாசர் பாடி, சென்னை—600 039 ஆண்டு நன்கொடை: ரூ 10.00

__இங்கும் அங்கும்:__ (இரு மொழி மாத இதழ்) கல்வியகம், 6, திருவேங்கடம் தெரு, வட கோவை, கோயம்புத்தூர்-641002 ஆண்டுக் கட்டணம், ரூ 6.00 இரு ஆண்டு கட்டு: ரூ 10.00

__கவிப்புனல் :__ (கவிதைத் திங்கள் இதழ்) சமதர்மன், 57, குளை நெடுஞ் சாலை, சென்னை-112, தனியிதழ் : 50 காசுகள்; ஆண்டுச்சந்தா : ரூ 5

__தமிழ்ப்பணி :__ (மாத இதழ்) பெருங்கவிக்கோ, 1, சாமி பண்டாரம் தெரு; சென்னை-2, தனி இதழ் : ரூ 1.

__நலிந்தோர் இடிமுழக்கம் :__ (மக்கள் சமூகப் பண்பாட்டுக் கழகத்தின் பாடல் தொகுப்பு) மக்கள் சமூகப் பண்பாட்டுக் கழகம், 48, டிசுபென்சரி சாலை, பெங்களூர்—1. விலை : ரூ 2.00.

__சிறைமீட்கும் சிந்தனைகள்:__ (கவிதைத் தொகுதி) தொகுப்பாசிரியர்: அல்லி உதயன், உண்ணுமலை பதிப்பகம், ஸ்டாலின் தெரு, (கூட்டுறவு வங்கி அருகில்) அல்லி நகரம் (தேனி)—626531 விலை ரூ 2.00

__"எங்களுக்குவாழ்விலையா":__ சமூக சிந்தனை வளர்ச்சி மையம், 45—C, காரனேசன் தெரு, அரசரடி, மதுரை—625 010

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010

# தெரிந்து கொள்ள வேண்டிய "பாலியல்"

நம் நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்களுக்கு, முக்கியமாக நம் பெண்களுக்கு ஆண்-பெண் "இல்லற வாழ்க்கை" பற்றி மிக அடிப்படையான விஷயங்கள் கூட தெரியாமலிருப்பது மிகவும் பரிதாபமான ஒரு நிலை. பண்பாடு, கலாச்சாரம் என்ற போர்வைகளினால் இந்த ஒரு இயல்பான உயிர் இயககத்திற்குத் தேவையான பாலியல் கல்வி முழுவதுமாக மறைக்கப்பட்டிருப்பது கொடுமையிலும் கொடுமை.

சரியான முறையில் இல்லற வாழ்க்கையின் செயல்பாடுகள் பற்றி தெளிவாக விளக்கப்படாததால் இளைஞர் இளைஞிகள் இந்த மறைக்கப்பட்ட மர்மத்தை அறிந்து கொள்ளத் தவறான வழிகளை நாட அது அவர்களை ஒழுக்கக் கேட்டிற்குக் கொண்டு செல்கிறது. இந்த புதிருக்கு விடை கண்டுபிடிக்கும் ஈடுபாட்டில் வெள்ளையான விஞ்ஞான ரீதி விளக்கப்புத்தகங்களை விட மஞ்சள் பத்திரிகைகளும் நீலப்படங்களுமே அவர்களுக்கு அதிகமாகக் கிடைக்கின்றன.

வயது வந்து முறையாகத் திருமணம் ஆன பின்னும் கூட "இல்லற வாழ்க்கையில்" எதைச்செய்யலாம், எதைச்செய்ய வேண்டும், எதை எப்போது செய்யக்கூடாது என்பது பற்றியெல்லாம் தெளிவான உறுதியான, ஆதார பூர்வமான தீர்மானங்கள் மிகப் பெரும்பாலானவர்களுக்குத் தெரிவதில்லை. மருத்துவப் படிப்புப்படித்தவர்களைத் தவிர வேறு எந்தப்பெரிய படிப்புப் படித்தவர்களுக்கும் கூட இது விபரமாகத் தெரிவதில்லை. படிக்காதவர்களின் நிலை கேட்பானேன்?

இதில் மிக முக்கியமாகப் பெண்களில் மிக மிகப் பெரும்பான்மையினர் இவ்விஷயத்தில் சுத்த சைபராக இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. இவர்கள் "இல்லற வாழ்க்கை"யில் உள்ள உச்ச இன்பத்தை உணராமலேயே, அப்படி ஒன்று இருப்பதை அறியாமலேயே வாழ்ந்து முடித்து விடுகின்றனர். ஆணின் போகத்துக்கு பயன்படுத்தப்படும் பெண்ணுக்கு அதில் சிறு பங்கு கூடக்கிடைப்பதில்லை. எவ்வளவு பெரிய அநியாயம்?

படித்த, நாகரிகமான குடும்பங்களில் கூட இந்த பாலியல் அறிவை ஏதோ பாவகாரியமாக உருவகித்துப் பெண்களை இதிலிருந்து மிக அந்நியப்படுத்தி வைத்திருக்கிறார்கள். எப்படியும் அவர்களைத் திருமணம் செய்து தானே கொடுக்கப் போகிறார்கள்? முதலிரவன்றே பெண்கள் விபரம் புரியாமல் மருண்டு வெளிறி குழம்பித் தவித்துப் போகிறார்களே! ஏன் இந்த முட்டாள் தனம்?


இந்த அறியாமையினால் "இல்லற வாழ்க்கை" ஈடுபாட்டில் அவ்வப்போது ஏற்படும் இது சம்பந்தமான கோளாறுகள் இந்த உறுப்புகளில் ஏற்படும் பிரச்சனைகள் போன்றவைகள் பற்றி உடற்கூறு ரீதியாக எதுவும் தெரியாததால் இந்த கோளாறுகளுக்குத் தக்க தருணத்தில் உரிய மருத்துவம் பார்த்துக் கொள்ளத் தவறிவிடுகிறார்கள். இதன் பின் விளைவு மிக ஆபத்தானதாக இருக்கிறது.

நம் பள்ளி, கல்லூரிகளில் வாழ்க்கைக்குச் சற்றும் பயன் படாத "ஹர்ஷர் செய்த நன்மைகள்" பற்றி தீவிரமாகச் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால் வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமான, தவிர்க்க முடியாத, தெளிவாகத் தெரிந்தே ஆக வேண்டிய பாலியல் கல்வியை உடற்கூறு ரீதியாக சரியாகப் போதிப்பது இல்லை. இதற்குப் பைத்தியக்காரத்தனமான, மௌடீகத்தனமான காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

"இல்லற வாழ்க்கை" என்பது படைப்பு என்ற பாங்கான கடமையைச் செய்ய அடிப்படையானதும், அன்றாடம் வாழ்ந்தே தீரவேண்டியதும், தவிர்க்க முடியாததும் ஆகும். அப்படி இருக்கும் போது, பள்ளி, கல்லூரிகளில் கட்டாயம் உடற்கூறு ரீதியான பாலியல் கல்வியைத் தெளிவாக போதித்தே ஆகவேண்டும். முக்கியமாகப் பெண்களை இந்த அறியாமை இருளிலிருந்து வெளிக்கொணர்ந்தே ஆகவேண்டும். நல்ல பாலியல் வல்லுனர்கள் எளிய நடையில் தெளிவான புத்தகங்கள் நிறைய எழுத வேண்டும். அவை மக்களைச் சுலபமாக அடைய அரசின் கல்வித் துறை, மருத்துவத்துறை ஆவன செய்யவேண்டும். —சுயராஜ்


**பணவிடை (M.O) அனுப்பும் வாசகர்கள்** சிலர் கிழிக்கப்பட வேண்டிய கீழ்பகுதியில் தங்கள் முகவரியை எழுதாமல் அனுப்பி விடுகிறார்கள், யார் பணவிடை அனுப்பினார்கள் என்பது கண்டு பிடிக்க முடியாமல் பிரச்சனையாகிறது. தயவு செய்து, தவறாமல் உங்கள் முகவரி கிழிக்கும் பகுதியில் எழுதப்பட்டிருக்கிறதா என்று சரி பார்த்து அனுப்புங்கள்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010




1871 /Dec 2010
http ://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

Licensed to post without prepayment    Licence No: TN/MS(N)WPP-




# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS motivates the farmers to adopt innovative tec nology for cultivation of sugarcane. The yield of sugarcane h improved to 45 tonnes from 28 tonnes enabling the farmers to ea an additional income of Rs 3000 Per acre

SAKTHI SUGARS provides the thrust for rural development by di tributing over RS. 12 crores as sugarcane price anntally and generat rural employment to over fifty thousand families in the primary, seco dary and tertiary sectors

SAKTHI INSTITUTE OF TECHNOLOGY developes technical ski while KAILASAM HOSPITAL Provides medical care for the region und the rural development programmes.

Admn. Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E BOOKS - www.thamizham.net - TM1871 / Dec 2010